

# விசாரணையும் இல்லை... கைதும் இல்லை...

# பல்வீர் சிங்கை பாதுகாக்க முயல்கிறதா போலீஸ்?





**நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் சரகத்தில் விசாரணைக் கைதிகளின் பற்கள் பிடுங்கப்பட்ட விவகாரத்தை விசாரித்துவரும் சி.பி.சி.ஐ.டி போலீஸார், குற்றச்சாட்டுக்கு உள்ளான ஏ.எஸ்.பி பல்வீர் சிங் உள்ளிட்ட ஐந்து காவல்துறையினர் மீது வழக்கு பதிவுசெய்ததோடு சரி. அவர்களை விசாரிக்கவும் இல்லை, கைது செய்யவுமில்லை என்று குமுறுகிறார்கள் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினர்.**



அம்பாசமுத்திரம் சரக ஏ.எஸ்.பி-யாக இருந்த பல்வீர் சிங், விசாரணைக் கைதிகளின் பற்களைப் பிடுங்கிய குற்றச்சாட்டுக்கு ஆளானதும், சேரன்மகாதேவி சப்-கலெக்டர் விசாரணை நடத்தினார். அதைத் தொடர்ந்து அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். இந்த நிலையில், மாநில மனித உரிமை ஆணையம், மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரி அமுதா, மாவட்ட குற்றப்பிரிவு என அடுத்தடுத்து விசாரணை நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி-க்கு மாற்றப்பட்டது.

தற்போது பல்வீர் சிங், அவருக்கு உடந்தையாக இருந்த காவல்துறையினர்மீது வன்கொடுமை தடுப்புச் சட்டம், சிறார் பாதுகாப்புச் சட்டம் உள்ளிட்ட ஏழு பிரிவுகளில் வழக்கு பதிவுசெய்து சி.பி.சி.ஐ.டி போலீஸார் விசாரித்துவருகிறார்கள். பற்கள் பிடுங்கப்பட்டது தொடர்பாக 5-ம் தேதி நேரில் விசாரணைக்கு ஆஜராகுமாறு பாதிக்கப்பட்ட ஏழுபேருக்கும் சம்மன் அனுப்பப்பட்டிருந்தது.

அதன்படி அருண்குமார், அவரின் 17 வயது தம்பி சார்பாகப் பெற்றோரான கண்ணன், ராஜேஸ்வரி ஆகியோர் வழக்கறிஞர்களுடன் ஆஜரானார்கள். மற்றவர்கள் யாரும் வரவில்லை. வந்தவர்களும் வாக்குமூலம் எதுவும் அளிக்காமல் மனுவை மட்டும் கொடுத்துவிட்டு வெளியே வந்துவிட்டனர். இது பற்றி ராஜேஸ்வரியிடம் கேட்டதற்கு, “என் மகன் அருண்குமார் பெங்களூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் மேனேஜராக வேலைசெய்கிறான். அவன் 5-ம் தேதி ஆஜராவதற்கு 3-ம் தேதிதான் சம்மன் கிடைத்தது. அதையும் அவனது பெங்களூர் அலுவலகத்துக்கு அனுப்பாமல், எங்கள் வீட்டுக்கு அனுப்பியிருந்தார்கள். தனியார் நிறுவனத்தில் உடனடியாக லீவு கிடைக்கவில்லை என்பதால் அவனால் ஆஜராக முடியவில்லை. என் மகன் புகாரளித்து 50 நாள்கள் கழித்து சி.பி.சி.ஐ.டி போலீஸார் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்திருக்கிறார்கள். இந்த தாமதம் ஒரு பக்கமிருக்க, ஏற்கெனவே நடந்த சப்-கலெக்டர் விசாரணை, அமுதா ஐ.ஏ.எஸ் விசாரணை ஆகியவற்றின் முடிவுகளும் இன்னும் ஏனோ வெளியாகவில்லை.


என் இரு மகன்களின் பற்களைப் பிடுங்கிய பல்வீர் சிங்கையும், அவருக்கு உடந்தையாக இருந்த போலீஸாரையும் இதுவரை விசாரணைக்குக்கூட அழைக்கவில்லை. ஆனால் எங்களை மட்டும் அடுத்தடுத்து விசாரணைக்கு அழைப்பது ஏன்... ஏற்கெனவே எங்களை போலீஸார் மிரட்டி, ‘பல்வீர் சிங் நல்லவர்’ என்று சொல்லவைத்து வீடியோ எடுத்து வெளியிட்டார்கள். இப்போதும் எங்களுக்கு மிரட்டல் வந்துகொண்டுதான் இருக்கிறது. எங்களுக்கு உரிய பாதுகாப்பு கொடுக்க வேண்டும்” என்றார்.

அருண்குமாரின் வழக்கறிஞர்களான மாடசாமி, பாண்டியராஜன் ஆகியோர் கூறுகையில், “முதலில் பல்வீர் சிங் உள்ளிட்ட போலீஸாரைக் கைதுசெய்து விசாரிக்க வேண்டும். குற்றச்சாட்டுக்குள்ளாகி இருப்பவர் ஐ.பி.எஸ் அதிகாரி என்பதால், அவரைவிடவும் கூடுதல் அந்தஸ்திலுள்ள அதிகாரி விசாரித்தால் மட்டுமே சரியானதாக இருக்கும். அதனால் டி.ஐ.ஜி அல்லது ஐ.ஜி அந்தஸ்திலான அதிகாரியின் மேற்பார்வையில் இந்த விசாரணை நடத்தப்பட வேண்டும்.

ஏற்கெனவே கொடநாடு வழக்கில் சுதாகரன் ஐ.ஜி-யை மேற்பார்வை அதிகாரியாக அரசு நியமித்ததன் மூலம் சுதந்திரமான விசாரணை நடக்கிறது. அதே நடவடிக்கையை இந்த வழக்கிலும் மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தோம். அதோடு, சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் இருப்பதால் எஸ்.சி., எஸ்.டி சட்டப்படி சாட்சிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தி சி.பி.சி.ஐ.டி அலுவலகத்தில் மனு கொடுத்திருக்கிறோம்” என்றார்கள்.

பல் பிடுங்கப்பட்ட விவகாரத்தை வெளியில் கொண்டு வந்த வழக்கறிஞர் மகாராஜனிடம் பேசினோம். “குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருப்பவர்கள் அனைவரும் காவல்துறையினர் என்பதால், சாட்சிகளை மிரட்டும் சம்பவங்கள் நடக்கின்றன. குற்றம் நடந்திருப்பதற்கான ஆதாரங்கள் இருப்பதால், உடனடி நடவடிக்கையைக் காவல்துறை மேற்கொள்ள வேண்டும். இந்த வழக்கை விரைவாக நடத்தி முடிக்க வேண்டும்.

சங்கர்



சாத்தான்குளம் சம்பவத்தில் தொடர்புடைய காவல்துறையினர் கைதுசெய்யப்பட்டதால் சாட்சிகள் அச்சமின்றி சாட்சியம் அளித்தார்கள். அதேபோல இந்த வழக்கிலும் கைது நடவடிக்கை எடுக்கப்பட்டால் மட்டுமே பாதிக்கப்பட்ட மேலும் பலர் சுதந்திரமாகச் சாட்சியம் அளிக்க முன்வருவார்கள். அதைச் செய்யாமல், விசாரணை என்ற பெயரில் பாதிக்கப்பட்டோரை மேலும் அலைக்கழிக்கக் கூடாது” என்று படபடத்தார்.

அம்பாசமுத்திரம் வழக்கை விசாரிக்கும்



சி.பி.சி.ஐ.டி பிரிவின் ஏ.டி.எஸ்.பி-யான சங்கரிடம் இது பற்றிக் கேட்டதற்கு, “வழக்கு தொடர்பான விசாரணை நேர்மையாகவும் நியாயமாகவும் நடைபெற்றுவருகிறது. பாதிக்கப்பட்டவர்களிடம் தற்போது விசாரணை நடத்திவருகிறோம். தங்களுக்குத் தெரிந்த தகவல்களைத் தெரிவிக்க வேண்டியவர்கள், விசாரணைக்கு ஆஜராகாமல் இருப்பது சரியல்ல. வழக்கில் தொடர்புடைய அனைவரையும் அடுத்தடுத்து அழைத்து விசாரிப்போம்” என்று முடித்துக்கொண்டார்.

முதலில் குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்யுங்கள் அய்யா... சாட்சிகள், தானே வருவார்கள்!

**- ஆண்டனிராஜ்**

படங்கள்: எல்.ராஜேந்திரன்